செ.வெ.எண்:56 நாள்:28.07.2016

# பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசு உத்தரவின்படி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் செயல்பட்டுவரும் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் அரசுக்கு ஒப்படைப்பு செய்யப்படும் 50% இடங்களுக்கும் முதற் கட்ட கலந்தாய்வு 11.07.2016 முதல் 15.07.2016 வரையிலும், மற்றும் 2-ம் கட்ட கலந்தாய்வு 25.7.2016 மற்றும் 26.07.2016 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டை மற்றும் விராலிமலை அரசு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் முதல் மற்றும் இரண்டாவது கட்ட கலந்தாய்வு நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள 298 இடங்களில் 297 இடங்களும், விராலிமலை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள 131 இடங்களில் 129 இடங்களும், தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள 402 இடங்களில் 282 இடங்களும் ஆக மொத்தம் 831 இடங்களில் 708 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. நிரப்பப்படாமல் மீதமுள்ள 123 இடங்களுக்கு தொழிற் பயிற்சி வகுப்புகளில் சேர்ந்திடஇணையதளம் வாயிலாக ஏற்கனவே விண்ணப்பித்த 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு 30.07.2016 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்குஅரசினர் தொழிற் பயிற்சி நிலையம் புதுக்கோட்டையில் 3-ம் கட்ட மாவட்ட கலந்தாய்வு நடைபெறவுள்ளது.இரண்டாம் கட்ட கலந்தாய்வில் கலந்து கொள்ளாத 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களும் மேற்படி கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம்.

மேலும், விபரங்களுக்கு புதுக்கோட்டை, அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் அவர்களை நேரிலோ, அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண். 04322-221584.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**